# ஸலவாத்துல் அபவைன் - தமிழ் மொழிபெயர்ப்பு

யாஅல்லாஹ்! எங்கள் உயிரினும் மேலான ரஸூலுல்லாஹ் முஹம்மதுநபி ஸல்லல்லாஹுஅலைஹிவஸல்லம் அவர்கள்மீதும், அவர்களின் பரிசுத்தமான குடும்பத்தினர் மீதும் உனது மிக அருமையான ஸலவாத்து ஸலாம் பரக்கத்து எனும் அருள் ஆசிகளை சம்பூர்ணமாகப் பொழிந்தருள்வாயாக. இன்னும் எங்கள் நாயகம் ஸல்லல்லாஹுஅலைஹிவஸல்லம் அவர்களை ஈன்றெடுத்தப் பெற்றோர்களான பெரியார்கள் மிகவும் தெளிவானவர்கள், தேர்ந்தெடுக்கப் பட்டவர்கள், சத்தியசீலர்கள், இறைவனுக்காக தன் இன்னுயிரையும் ஈந்தவர்களான எங்களின் மகா கண்ணியமிகு தலைவர் ஸெய்யிதுனா அப்துல்லாஹ் ரலியல்லாஹுதஆலாஅன்ஹு ஸெய்யிதத்தினா ஆமினா ரலியல்லாஹுதஆலா அன்ஹா இருவர்களின் மகிமைகளை மிகவும் உயர்த்தியருள்வாயாக.. அவர்கள் பொருந்திகொள்ளும் வகையில் உனது திருவுளப்பொருத்தத்தை அவர்கள் மீது நீ பொழிந்தருள்வாயாக. பெற்றோர்களுக்கு நன்மக்களை ஈன்றெடுத்ததற்காக நீ வழங்கும் சன்மானத்தில் மகாமேலான பரிசுதனை அன்னை ஆமினா அப்துல்லாஹ் தம்பதிகளுக்கு வழங்கி கண்ணியப்படுத்துவாயாக.